பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

விழியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 19 புதன்கிழமை 05.11.2025 கதிர் 360

## இனி இது ரகசியம் அல்ல!

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டுக்கு எதிரான வழக்கு நேற்று மீண்டும் திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. நவம்பர் ☞ 2

# முன்னாள் ஆட்சியாளர்களே பாதுகாப்புக் கோருகின்றனர்

### அமைச்சர் நளிந்த சுட்டிக்காட்டு

நாட்டில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் குழுக்களுக்கிடையில் துப்பாக்கிச்சூடுகள் இடம்பெற்றுவரும் நிலையில், முன்னர் ஆட்சியிலிருந்தவர்கள் பாதுகாப்பினை கோருகின்றனர். அவர்களது கோரிக்கைகள் தொடர்பில் பொலிஸாரால் பாதுகாப்பு மதிப்பாய்வுகள் முன்னெடுக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பில் இதனைத் ☞ 6

### இலங்கை – இந்திய

# சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை புதுப்பிக்க அழைக்கிறார் சஜித்

நவீன வர்த்தக யதார்த்தங்களுக்கு ஏற்றவாறு இந்திய-இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை புதுப்பித்துக் கொள்வதற்கு அழைப்பு விடுத்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, இந்தியாவின் மாதிரியைப் பின்பற்றி புத்தாக்கம், அரச - தனியார் கூட்டு முயற்சியாண்மைகள், ஆராய்ச்சி மற்றும் வணிகத் துறைகளுடன் பொருளாதாரக்கொள்கைகளை இணைப்பதன் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

டில்லிக்குப் பயணம் மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச, நேற்று இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனை சந்தித்தார். அப்போது இது தொடர்பில் ☞ 6

# யாழ். மாவட்டத்தில் நான்கு பேர் கைது

### போதைப் பொருள் பயன்பாட்டாளர்கள்

யாழ். மாவட்டத்தில் போதைப் பொருட்களுடன் நேற்று 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தின் தொடர்ச்சியாக பொதைப்பொருள் அழிப்பு நடவடிக்கை பொலிசாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில், யாழ்ப்பாணம் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாணம் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது யாழ் குருநகர் பகுதியில் மூவர் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் 24,26,28 வயதுடைய இளைஞர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களிடமிருந்து 30 மில்லிக்கிராம் கெரோயின் 1000 மில்லிக் கிராம் கஞ்சா 05 போதை மாத்திரைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிசார் மேற்கொண்டுவருகின்றனர் ☞ 6

### அரசுத் தலைவரின் ஆலோசனைப்படி முடிவு

# இந்திய அதானி நிறுவன காற்றாலைகளுக்கு தடை

### மன்னாரில் வேறு திட்டங்களுக்கு இனி இடமில்லை

**மன்னார் தீவில் இந்தியாவின் அதானி நிறுவனத்தால் முன்னெடுக்கப்படவிருந்த காற்றாலைத் திட்டத்தைக் கைவிடுவது என்று ஆளும்தரப்புத் தீர்மானித்துள்ளது. அங்கு தற்போது செயற்படுத்தப்பட்டு வரும் இரு திட்டங்களைத் தவிர்த்து வேறு எந்தவொரு திட்டத்தையும் செயற்படுத்த வேண்டாம் என்று அரசுத் தலைவர் வழங்கிய ஆலோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.**

**மன்னார் தீவில் காற்றாலைகள் அமைக்கப்படுவதற்கும், கனிய மணல் அகழ்விற்கும் மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். தாம் ஆட்சியைப் பிடித்தால் இந்தத் திட்டங்களைச் செயற்படுத்த அனுமதிக்கமாட்டோம் என்று என்பிபி தேர்தல் காலத்தில் வாக்குறுதி வழங்கியது. எனினும் உள்ளூர்** ☞ 2

### ஊழல் குற்றச்சாட்டில்

# கடற்றொழில் கூட்டுத்தாபன முன்னாள் தலைவர் கைது

### பணிப்பாளர், முகாமையாளர்களும் உடன் கைது

விலைமனுகோரலுக்கு அப்பாற்பட்டு வெகும் சீலர் இயந்திரத்தை கொள்வனவு செய்து அரசுக்கு 5,856,116.00 ரூபாய் நட்டத்தை ஏற்படுத்திய மோசடி குற்றத்துக்காக இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் உட்பட மூவர் இலஞ்சம், ஊழல் பற்றி விசாரணை செய்யும் ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

2020ஆம் ஆண்டு இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்துக்கு, மணிக்கு 2000 கிலோகிராம் மீன்களைபொதியிடும்வகையில் உயர்தரத்திலான இயந்திரத்தை (வெகும் சீலர்) கொள்வனவு செய்வதற்கான தேவைப்பாடு இருக்காதபோதும் முறையானவிலைமனுக்கோரலுக்குஅப்பாற்பட்டு வெகும் சீலர் இயந்திரத்தை கொள்வனவு செய்ததால் அரசுக்கு 5,856,116.00 ரூபாய் நட்டத்தை ஏற்படுத்தினார் என்று அவர் மீது குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் களுவடன லலித் தவுலுகல, முகாமைத்துவ பணிப்பாளர் ரத்னவீர சந்தன கிருஷான், விநியோக முகாமையாளர் விஜித் புஸ்பகுமார, கண்காணிப்பு முகாமையாளர் அநுர சந்ரசேனபண்டார ஆகியோரே இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்யும் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

### உயிர்த்த ஞாயிறு

# தாக்குதல் நடந்த தேவாலயங்களை பார்வையிடும் வத்திக்கான் அமைச்சர்

2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு உள்ளான கத்தோலிக்க தேவாலயங்களுக்கு இன்று நேரில் சென்று பார்வையிடவுள்ளார், இலங்கை வந்துள்ள வத்திக்கான் அயலுறவுத்துறை அமைச்சரான பேராயர் போல் ரிச்சர்ட் கல்லாகர். காலையில் கொழும்பு-கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்துக்கும், பின்னர் கட்டுவாப்பிட்டிய தேவாலயத்துக்கும் அவர் செல்லவுள்ளார்.

அத்தோடு நாளை வியாழக்கிழமை கண்டி செல்லவுள்ள அவர், அங்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பௌத்த விகாரைகளுக்கும் சென்று பௌத்த மதத் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

நவம்பர் 6 காலியிலுள்ள சுனாமி நினைவுத் தூபிக்கு செல்லவுள்ள அவர், அங்கு ஆழிப் பேரலையால் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலிசெலுத்தவுள்ளார். சனிக்கிழமைகாலை அவர் இலங்கையைவிட்டுப் புறப்படவுள்ளார்.

இதேவேளை, வத்திக்கான் அயலுறவுத்துறை அமைச்சர், பிரதமர் ஹரிணியை திங்கட்கிழமை சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

இருதரப்பு ஒத்துழைப்புக்கள் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் தொடர்பில் இந்த சந்திப்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமருடனான சந்திப்பில் கொழும்பில் உள்ள புனிதப் பேராயத் தூதரகத்தின் பொறுப்பாளர் மான்சிந்யோர் ராபர்டோ லுச்சினி மற்றும் புனிதப் பேராயத்தின் வெளியுறவுச் செயலகத்தின் இரண்டாவது செயலாளர் மான்சிந்யோர் டோமிஸ்லாவ் ஜுபாக் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# நீதிபதி இளஞ்செழியனுக்கு திட்டமிட்டு சேவை நீடிப்பு மறுக்கப்படவில்லை

### ஆளும்தரப்பு விளக்கம்

முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் மற்றும் அவரது சட்டத்துறை சார் சேவைகள் மீது என்றும் எமக்கு மதிப்பும் கௌரவமும் காணப்படுகிறது. திட்டமிட்டு அவருக்கான சேவை நீடிப்பு மறுக்கப்படவில்லை. குறித்த காலப்பகுதியில் சேவை நீடிப்பிற்கான அவசியம் ஏற்பட்டிருக்காது என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

தனக்கான சேவை நீடிப்பு குறித்து அரசுத் தலைவர் அநுரகுமாரவுக்கு 4 சந்தர்ப்பங்களில் கடிதம் அனுப்பினார் எனவும், அவற்றில் ஒன்றுக்கேனும் பதில் கிடைக்கவில்லை என்றும் முன்னாள் மேல் நீதிமன்ற ☞ 6

# வத்திக்கான் புனிதபீடத்துடன் ஒத்துழைக்க இலங்கை தயார்

### அயலுறவுத்துறை அமைச்சர் அறிவிப்பு

ஐக்கிய நாடுகள் சபையிலும், பல்தரப்பு மன்றங்களிலும் பகிரப்பட்ட ஆர்வமுள்ள விடயங்களில் வத்திக்கான் புனிதபீடத்துடன் நெருக்கமாக ஒத்துழைக்க இலங்கை தயாராக இருப்பதாக அயலுறவுத்துறை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு அரசுமுறைப் பயணமாக வந்துள்ள வத்திக்கான் ☞ 2

## இனி இது .....

25 திகதியிடப்பட்டு அது ஒத்திவைக்கப்பட்டது.

இடையீட்டு எதிராளி என்ற பெயரில் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டு, இந்த வழக்கு திட்டமிட்டு இழுத்தடிக்கப்படுவதற்கு முயற்சிக்கப்படுவதாக எதிராளிகளில் ஒருவரான சுமந்திரன் நேற்று நீதிமன்றத்தில் ஆட்சேபம் தெரிவித்தார்.

கிளிநொச்சியைச் சேர்ந்த தமிழரசுக் கட்சியின் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளையின் சகோதரரான கட்சி உறுப்பினர் பரமானந்தன் என்பவர் தம்மையும் இந்த வழக்கில் ஓர் எதிராளியாகச் சேர்த்துக் கொள்ளக் கோரியுள்ள விண்ணப்பத்தின் மீதே சுமந்திரன் தனது ஆட்சேபனையைத் தெரிவித்தார்.

கட்சியின் அங்கத்தினர் எவரும் இந்த வழக்கில் எதிராளிகளாகத் தங்களை இணைப்பதற்கான கால அவகாசத்தை நீதிமன்றம் ஏற்கனவே வழங்கி இருந்தது. அதன் பின்னர் தாக்கல் செய்யப்பட்ட ஓர் இடையீட்டு விண்ணப்பம் நீதிமன்றத்தினால் ஏற்கனவே நிராகரிக்கப்பட்டுள்ளது. இப்போது இன்னொன்று வந்துள்ளது. இப்படி ஒவ்வொரு விண்ணப்பத்தின் பெயரிலும் ஆட்சேபனைகள், விசாரணைகள் போன்றவற்றுக்குக் கால அவகாசம் வழங்கி, காலத்தை இழுத்தடிக்க இடம் அளிக்க முடியாது என்று சுமந்திரன் நீதிமன்றத்தில் நேற்று சுட்டிக்காட் டினார்.

திருகோணமலை மாவட்ட நீதிமன்ற நீதிபதியாக புதிதாக பொறுப்பேற்றுள்ள ஜீவராணி முன்னிலையிலேயே இந்த வழக்கு நேற்று முதல் தடவையாக எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது. இதனால் வழக்கு குறித்து மன்றில் புதிதாக விளக்கம் அளிக்க வேண்டியிருந்தது.

அதேநேரம் கட்சியின் தலைமைப் பதவியைப் புதிதாகப் பொறுப்பேற்றுள்ள சிவஞானம், முன்னைய தலைவரான மாவை சேனாதிராசவிற்குப் பதிலாக கட்சியின் தலைவராக ஏற்றுக்கொள்ளப்பட்டு தன்னுடைய பதில் மனுவை தாக்கல் செய்தார். அதேநேரம், இடையீட்டு எதிராளியாகத் தன்னையும் சேர்த்துக்கொள்ளும்படி விண்ணப்பம் செய்துள்ள பரமானந்தனின் மனு தொடர்பில் ஏனைய எதிராளிகள் ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்வதற்காக வழக்கை நவம்பர் 25 வரை நீதிமன்றம் ஒத்திவைத்தது.

...........................................

தமிழ் அரசியல்வாதிகளிலேயே முதுகெலும்புள்ள நேர்மையான ஒருவர் தான்தான் என்பதை அருந்தவபாலன் நிரூபித்துள்ளார். அவர் ஒரு 'கறார் பேர்வழி' 'ஒற்றை ரூட்டுக்காரர்' 'அரசியல் நெழிவுசுழிவற்றவர்' 'முசுடு' என்றெல்லாம் சொல்லப்பட்டாலும், அதுவேதான் அவருக்கு இந்தத் துணிச்சலையும் கொடுத்திருக்கிறது என்று நான் நினைக்கின்றேன். ஏன் திடீரென அருந்தவபாலனுக்கு இத்தனை பாராட்டுக்கள் என்றுதானே எண்ணுகிறீர்கள். . . .! காரணம் இருக்கின்றது.

தமிழ் அரசியல் கட்சித் தலைவர் ஒருவர் மாட்டிக் கொண்டுள்ள தனிமனித ஒழுக்கம் தொடர்பான பாலியல் சர்ச்சையில் துணிந்து கருத்துத் தெரிவித்திருக்கும் ஒரே தமிழ் அரசியல்வாதி இல்லையில்லை அரசியல்வாதியே அவர் மட்டும்தான். மற்றைய எல்லோரும் அந்த அரசியல் கட்சித் தலைவருடன் தமக்கிருக்கும் நல்லுறவைக் காரணம்காட்டிக் கருத்துத் தெரிவிக்க மறுத்து வரும்போது, அதாவது அவர் செய்திருக்கும் ஒழுக்கக் கேட்டையும் குற்றத்தையும் முழுங்கிச் செரிக்கும்போது கேள்வி கேட்டுக் கண்டித்திருக்கும் ஒரே அரசியல்வாதி அருந்தவபாலன் மட்டுமே!

தனது முகப்புத்தகத் தளத்தில் இப்படி எழுதியிருக்கிறார்.

ஒவ்வொரு தனிமனிதனுக்கும் சுய ஒழுக்கம் முக்கியமானது. அதிலும் பொதுவாழ்வில் ஈடுபடுவோருக்கு, குறிப்பாகத் தம்மைத் தமிழ்த் தேசியவாதிகளாகக் காட்டிக்கொள்வோருக்கு அது மிகமிக முக்கியமானது.

ஆனால் இங்கு நடப்பது என்ன?

தமிழ்த் தேசியவாதி, நாடாளுமன்ற உறுப்பினர், முன்னாள் போராளிகளின் தலைவர் செய்வது என்ன?

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு அவிசு.

ஊடகங்களை ஒருபுறம் ஒதுக்கிவைப்போம். அவை ஒவ்வொன்றும் சுயநலனும் சார்பு நிலையும் கொண்டவை. ஆனால் சமூகத்தில் தம்மை பெரிய மனிதர்களாகக் காட்டிக்கொள்வோர் அல்லது சமூகத்தால் அவ்வாறு கருதப்படுவோர் அல்லது தம்மை மக்களின் தலைவர்களாக எண்ணுவோர் இதுபற்றி இன்னும் ஏன் வாய்திறக்கவில்லை? இவை தனிப்பட்ட விடயம் என கடந்து செல்ல முடியுமா?

இவ்வாறான விடயங்கள் தொடர்பாக மௌனம் சாதித்துவிட்டு பின்னர் எமது சமூகம் சீரழிந்து செல்கிறதென நீலிக்கண்ணீர் வடிப்பதில் என்ன நியாயம் இருக்கப்போகிறது?

மக்கள் ஏன் அர்ச்சுனாவின் பின்னாலும் என்பிபி பின்னாலும் சென்றார்கள், செல்கிறார்கள் என்பது புரிகிறதல்லவா?

விடுதலைப் புலிகளின் சில செயற்பாடுகள் தொடர்பாக எதிர்மறையான விமர்சனங்கள் என்னிடம் இருந்தன. அச்சந்தர்ப்பங்களில் அதை அவர்களிடம் நேரடியாகவும் சொல்லியிருக்கிறேன். ஆனால், ஒவ்வொரு விடயத்திலும் எனது பார்வை தவறு அவர்கள் செய்ததே சரி என்பது தொடர்ந்து உறுதியாகி வருகிறது' என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

தமிழ்த் தேசியவாதி, நாடாளுமன்ற உறுப்பினர், முன்னாள் போராளிகளின் தலைவர் யார் என்பதை அவர் தனது பதிவில் பெயர் குறிப்பிடவில்லை என்றாலும் அவர் யார் என்பதை மக்கள் அறியக்கூடிய விதத்தில் யுரியூப் காணொலி ஒன்றைத் தனது பதிவுடன் இணைந்துள்ளார். அந்தக் காணொலியில் யார் அந்தத் தலைவர் என்பது தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது.

தமிழ்க் கட்சிகள் சிலவற்றின் தலைவர்கள் மற்றும் அரசியல்வாதிகளுடன் நான் இது பற்றிப் பேசினேன். "அதற்கு நாங்கள் என்ன செய்வது' என்று சிலர் பதிலளித்தார்கள். "............க்கு எதிராக நாங்கள் எப்படிக் கருத்துச் சொல்வது' என்று இன்னும் சிலர் சொன்னார்கள். "அவர் எங்களுடன் நல்ல மாதிரி, பிறகு நாங்கள் எப்படிக் கதைக்கிறது' என்று இன்னும் சிலர் சொன்னார்கள்.

இவர்கள்தான் தமிழ்த் தேசியத்தைக் காக்கிறவர்கள், இவர்கள்தான் தமிழ் மக்களுக்கு விடிவு தேடித் தரப்போகிறவர்கள். இப்படியே நம்பிக்கொண்டு சவக் குழிக்குள் போவதைத் தவிர வேறு எந்த விடிவும் தமிழர்களுக்குக் கிடையாது.

இதில் இன்னுமொரு வேடிக்கை என்னவென்றால், தமிழ்த் தேசியம் பேசும் இந்தத் தலைவர்களை இனவாதிகள் என்றும், இவர்களுக்கு தமிழர் நலன்களில் அக்கறையில்லையென்றும் காட்டுக் கத்தல் கத்தும் ஆளும்தரப்பினரும் அமைச்சர்களும்கூட இது விடயத்தில் தமது வாயையும்.... மூடிக்கொண்டு இருக்கிறார்கள். இது தொடர்பில் மூச்சுக் காற்றுக்கூட வெளியே கசிந்துவிடக்கூடாது என்று இறுக மூடிக்கொண்டிருக்கிறார்கள். இவர்களால்தான் இலங்கைக்கே விடிவு என்று குறைந்தது இன்னும் 4 ஆண்டுகளுக்கு நம்பவேண்டியிருக்கிறது.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## இந்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுவனங்கள் இரண்டிற்கு வழங்கப்பட்ட இரு ஒப்பந்தங்களின்படி காற்றாலைகளை அமைப்பதற்கு ஆளும்தரப்பு அனுமதி வழங்கியிருந்தது. அதற்கெதிராக மன்னார் மக்கள் தொடர் போராட்டங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்தினர். தொடர்ந்தும் நடத்திவருகின்றனர். இந்தப் போராட்டங்களை மீறியும் காற்றாலைத் திட்டத்தை முன்னெடுக்க பொலிஸ் பாதுகாப்புடன் அனுமதி வழங்கிய ஆளும்தரப்பு தற்போது அந்த இரு திட்டங்களுக்கும் மேலதிகமாக எந்தவொரு திட்டத்தையும் செயற்படுத்துவதில்லை என்று தீர்மானித்துள்ளது. இந்திய நிறுவனமான அதானி நிறுவனத்துடன் செய்துகொள்ளப்பட்ட திட்டமே அங்கு எஞ்சியுள்ள பெரிய காற்றாலைத் திட்டமாகும்.

என்பிபி ஆளும்தரப்பு இந்தத் திட்டம் தொடர்பில் காலதாமதத்தை ஏற்படுத்துகின்றது என்று தெரிவித்து அதானி நிறுவனம் ஏற்கனவே இந்தத் திட்டத்திலிருந்து வெளியேறுவதாக அறிவித்திருந்தது. எனினும் அந்தத் திட்டம் கைவிடப்படவில்லை என்றும் அதானி நிறுவனம் மின்சார அலகுகளுக்கு அறவிடவுள்ள கட்டணம் மிக அதிகம் என்பதால் அது குறித்து மீளாய்வு செய்ய அந்த நிறுவனத்துடன் பேச்சு நடத்தப்படும் என்றும் ஆளும்தரப்பில் தெரிவிக்கப்பட்டது. பேச்சு நடத்திதிட்டத்தை மீளவும் செயற்படுத்தாமும் தயாராக இருப்பதாக அதானி நிறுவனமும் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் மன்னாரில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் இரு காற்றாலைத் திட்டங்களுக்கும் மேலதிகமாக வேறு எந்தவொரு காற்றாலைத் திட்டத்தையும் தொடர்வதில்லை என்று ஆளும்தரப்புத் தீர்மானித்துள்ளது.

தீவு மக்கள் முன்வைக்கும் சுற்றாடல் மற்றும் சமூகப் பிரச்சினைகளைக் கருத்தில்கொண்டு, மக்களின் விருப்பமின்றி தொடர்ந்தும் குறித்த தீவில் காற்றாலை மின்னுற்பத்திக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டாமென அரசுத் தலைவர் அநுரகுமாரவினால் வழங்கப்பட்ட பணிப்புரைக்கமைய இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரசுத் தலைவர் அநுரகுமாரவின் இந்த பணிப்புரை குறித்து மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடியால் திங்களன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய இது குறித்த அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்குச் செல்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றும் அமைச்சர் நளிந்த தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று கொழும்பிலுள்ள அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பில் அமைச்சர் தெரிவித்ததாவது:

மீள்புதிப்பிக்கப்படும் வளங்களின் விரிவாக்கத் திட்டத்திற்கமைய, அதிகளவான காற்று ஆற்றல்வளம் கொண்ட பிரதேசமாக அடையாளங்காணப்பட்டுள்ள மன்னார் தீவில் மூன்று காற்றாலை மின்னுற்பத்தி திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன. குறித்த கருத்திட்டங்களில் ஒரு கருத்திட்டமான தம்பபவனி காற்றாலை மின்னுற்பத்தி நடவடிக்கைகள் 2021ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

ஏனைய கருத்திட்டங்களான விண்ட்ஸ்கேப் மன்னார் தனியார் நிறுவனத்தின் 20 மெகாவோல்ட் காற்றாலை மின்னுற்பத்தி மற்றும் ஹேலிஸ்பென்டோஸ் நிறுவனாத்தின் 50 மெகாவோல்ட் காற்றாலை மின்னுற்பத்தி நடவடிக்கைகள் முறையே 2025 டிசெம்பர் மற்றும் 2026 டிசெம்பர் மாதத்தில் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பிரதேச மக்கள் சமர்ப்பித்துள்ள சுற்றாடல் மற்றும் சமூகப் பிரச்சினைகளைக் கருத்தில்கொண்டு, மன்னார்தீவு மக்களின் விருப்பமின்றி தொடர்ந்தும் குறித்த தீவில் காற்றாலை மின்னுற்பத்திக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டாமென அரசுத் தலைவர் அநுரகுமாரவால் துறைசார் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளாக, வலுசக்தி அமைச்சரால் அமைச்சரவைக்குத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நாட்டில் மொத்த மின் உற்பத்தியில் 70 சதவீதத்தை மீள் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி ஊடாக உற்பத்தி செய்யவேண்டும் என்பதே தேசிய இலக்காகும். மீள்புதுப்பிக்கத்தளக்க வலுச்சக்தி எனும்போது காற்றாலை என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அதற்கமையவே மன்னார் மற்றும் அதனை அண்மித்த தீவுகள் காற்றாலை மின் உற்பத்திக்காகத் தெரிவு செய்யப்பட்டன. அதற்கமைய முன்மொழியப்பட்ட 3 வேலைத்திட்டங்களில் ஒன்று 2021ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு 100 மெகாவோல்ட் மின் உற்பத்தி செய்யப்பட்டது. இலங்கை மின்சாரசபையால் அந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இது தவிர மேலும் 70 மெகாவோல்ட் காற்றாலை மின்உற்பத்தி திட்டங்கள் இரண்டில் ஒன்றை இவ்வாண்டு டிசெம்பரிலும், மற்றைய திட்டத்தை 2026 டிசெம்பரிலும் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறிருப்பினும் அவை தொடர்பில் பல்வேறு தரப்புக்களிலிருந்தும் எதிர்ப்புக்கள் வெளியிடப்பட்டன. அந்த எதிர்ப்புக்களும் கவனத்தில் கொள்ளப்பட்டது. எனவேதான் இந்த மூன்று திட்டங்களுக்கு அப்பால் புதிய திட்டமொன்றை மன்னார் தீவை அண்மித்து தொடங்குவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை கைவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் மேற்கூறப்பட்ட மூன்று திட்டங்களுக்கு அப்பால் குறித்த பிரதேசத்தில் புதிதாக எந்தவொரு மின்உற்பத்திதிட்டத்தையும் நடைமுறைப்படுத்தாமலிருப்பதற்கு அரசுத் தலைவரால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. மன்னார் தீவில் தொடங்கப்படவிருந்த திட்டம் கைவிடப்பட்டுள்ளதால், காற்றாலை மின் உற்பத்தியை முன்னெடுக்கக்கூடிய வேறு பிரதேசங்களை இனங்காண வேண்டியுள்ளது. அதற்கு குறிப்பிட்ட காலம் செல்லும். அதேவேளை 70 சதவீத மீள்புதுப்பிக்கத்தக்க வலுச்சக்தி என்ற இலக்கையும் அடைய வேண்டியுள்ளது. மீள்புதுப்பிக்கத்த வலுசக்தியைப் போன்று, மக்களின் கோரிக்கைகளும் முக்கியத்துவமுடையவையாகும் என்றார்.

## வத்திக்கான் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அயலுறவுத்துறை அமைச்சர் பேராயர் போல் ரிச்சர்ட் கல்லாகர் மற்றும் அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோருக்கிடையில் நேற்று கொழும்பில் சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின் பின்னர் வெளியிட்ட விசேட அறிவிப்பிலேயே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வத்திக்கான் அயலுறவுத்துறை அமைச்சரின் இலங்கை வருகையானது, இலங்கைக்கும் வத்திக்கானுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் நிறுவப்பட்டு 50ஆவது ஆண்டு நிறைவைக் குறித்துநிற்கும் முக்கியமானதொரு நிகழ்வாகும். இது நாம் பெருமையுடன் கொண்டாடும் ஐந்து தசாப்த கால நட்பு, ஒத்துழைப்பு மற்றும் அமைதி, மனித அபிவிருத்தி மற்றும் சமூக நீதிக்கான பகிரப்பட்ட அர்ப்பணிப்பை பிரதிபலிக்கும் முக்கியமானதொரு மைல்கல்லாக விளங்குகிறது.

இந்த உயர் மட்ட ஈடுபாடானது, நமது நெருங்கிய உறவுகளையும், எதிர்கால ஆண்டுகளில் இந்த கூட்டாண்மையை ஆழப்படுத்துவதற்கான நமது பரஸ்பர விருப்பத்தினையும் தெளிவாகப் பிரதிபலிக்கிறது. வத்திக்கான் நீண்ட காலமாக உலக அரங்கில் தார்மீகக் நீதி, சமரசம், அமைதி மற்றும் ஆயுதக் குறைப்பு மற்றும் அனைத்து மக்களின் உரிமைகள், இலங்கை மக்களின் அபிலாஷைகளுடன் ஆழமாக எதிரொலிக்கும் மதிப்புகள் ஆகியவற்றை ஆதரிக்கும் தார்மீகக் குரலொன்றாக இருந்து வருகின்றது.

கடந்த ஐந்து தசாப்தங்களாக, நமது உறவுகள், குறிப்பாக மனிதாபிமான சேவை, கல்வி, மத நல்லிணக்கம் மற்றும் மனித கண்ணியத்தை மேம்படுத்துதல் போன்ற துறைகளில் பகிரப்பட்ட மதிப்புகளால் ஆதரிக்கப்பட்டு வருகின்றன. கத்தோலிக்க திருச்சபை இலங்கையின் மத மற்றும் சமூக நிலப்பரப்பில் முக்கிய பங்கு வகித்துள்ளதுடன், குறிப்பாக மோதலுக்குப் பிந்தைய சூழல்களில், தேசத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றிற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகிறது.

1970 ஆம் ஆண்டு புனித திருத்தந்தை ஆறாம் பவ்ல், 1995ஆம் ஆண்டு புனித திருத்தந்தை இரண்டாம் ஜோன் போல் மற்றும் 2015 ஆம் ஆண்டு புனித திருத்தந்தை பிரான்சிஸ் ஆகியோரின் வரலாற்றுச் சிறப்புமிக்க வருகைகளையும் நாங்கள் ஆழ்ந்த நன்றியுடன் நினைவு கூர்கிறோம். இவை ஒவ்வொன்றும் நமது மக்களின் இதயங்களில் நீடித்ததொரு செல்வாக்கை ஏற்படுத்தி, நமது நாடுகளுக்கு இடையிலான ஆன்மீக மற்றும் இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்தின.

தனிப்பட்ட முறையில், 2025 ஏப்ரல் 26 அன்று மறைந்த திருத்தந்தை பிரான்சிஸின் இறுதிச்சடங்கில் கலந்துகொள்ள வத்திக்கானுக்கு நான் சமீபத்தில் மேற்கொண்ட விஜயத்தை துக்கத்துடனும், பயபக்தியுடனும் நினைவு கூர்கிறேன். அப்புனிதமான சந்தர்ப்பம் உலகில் புனிதத் திருச்சபையின் நீடித்த தார்மீகக் குரலையும், நமது இருதரப்பு உறவுகளின் வலிமையையும் நினைவூட்டுவதாக இருந்தது. அவரது மதிப்பிற்குரிய தலைமையின் கீழ் புனிதத் திருச்சபையுடனான நமது ஈடுபாட்டை வலுப்படுத்த நாங்கள் எதிர்நோக்குகையில், இலங்கை ஆளும்தரப்பு மற்றும் மக்கள் சார்பாக, திருத்தந்தை பதினான்காம் லியோவுக்கு எனது பணிவான மரியாதையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று, நமது இராஜதந்திர உறவுகளின் பொன்விழாவைக் கொண்டாடும் வேளையில், இலங்கைக்கும் புனிதபீடத்திற்கும் இடையிலான பன்முக ஈடுபாட்டை, குறிப்பாக மதம், கல்வி, சுகாதாரம், மதங்களுக்கு இடையேயான உரையாடல் மற்றும் மனிதாபிமான ஒத்துழைப்பு ஆகிய துறைகளில் பெருமையுடன் பிரதிபலிக்கிறோம். இலங்கை-வத்திக்கான் உறவுகளில் ஒரு பாலமாகச் செயற்படும் கத்தோலிக்க சமூகத்தின் நீடித்த ஆதரவையும், பங்களிப்பையும் குறிக்கும் வாய்ப்பாக நான் இந்நிகழ்வை கருதுகிறேன்.

இலங்கையில் உள்ள கத்தோலிக்க திருச்சபை, தேசத்தைக் கட்டியெழுப்புதல்,

தொடர்ச்சி 6ம் பக்கம்...


JDr
JDR CARE HOME
&
MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான
பூரண வசதிகளுடனான
பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane,
Jaffna

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கனவுகளுக்கு முன் யதார்த்தை பாருங்கள்

இலங்கை வளர்ச்சியின் பெயரில் பெரும் திட்டங்களை வரைந்து வருகின்ற நாடாகப் பெருமைப்படுகிறது. மேம்பட்ட நெடுஞ்சாலைகள், நவீன நகரங்கள், உயர்மாடிக் கட்டடங்கள்– இவை அனைத்தும் நாட்டின் முன்னேற்றத்தின் அடையாளங்களாகப் பேசப்படுகின்றன. ஆனால் இதன் நடுவில் ஒரு வெட்கக்கேடான உண்மை இன்னும் நிழல்போல் துரத்துகிறது: ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இன்றுகூட தங்கள் வீடுகளில் கழிப்பறை வசதியின்றி வாழ்கின்றன.

மக்கள் தொகை மற்றும் வீடமைப்பு திணைக்களம் (ம்ளஸ்ரீழிஷமிதுளஜமி லிசூஃ ளீளஜவிற்வி ழிஜ– றீமிழிமிஷ்விமிஷ்உவி) வெளியிட்ட 2024 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி, நாட்டில் உள்ள 61 இலட்சம் குடும்பங்களில் சுமார் 13,000 குடும்பங்கள் இன்னும் வெளிப்புறத்தில் மலமொழுகுகின்றன. இது வெறும் 0.2 சதவீதம் என்ற எண் போல தோன்றினாலும், அதன் பின்னால் மனிதாபிமானத்தின் மையத்தைக் குலைக்கும் ஓர் உண்மை உள்ளது.

### அடிப்படை உரிமை

இது வெறும் சுகாதார குறைபாடு அல்ல; இது மனித உரிமை மீறல். ஐக்கிய நாடுகள் பொதுச்சபை தெளிவாகவே, 'தூய குடிநீருக்கும் கழிப்பிட வசதிக்குமான உரிமை' என்பது ஒவ்வொரு மனிதனின் அடிப்படை உரிமை என்று அறிவித்துள்ளது. 2015ஆம் ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையான வளர்ச்சி இலக்குகள் (Sustainable Development Goals) – குறிப்பாக இலக்கு 6.2 – அனைவருக்கும் சமமான கழிப்பிட வசதி மற்றும் சுகாதார நெறி வழங்கப்படவேண்டும் என உறுதி செய்கின்றன. இந்நிலையில், இலவசக் கல்வி, சுகாதார சேவை, மற்றும் உயர் கல்வி விகிதத்தில் பெருமை கொள்ளும் இலங்கை இன்னும் 13,000 குடும்பங்களுக்கு அடிப்படை வசதியை வழங்க முடியவில்லை என்பது பெரும் தோல்வி.

### பொறுப்பின்மையின் பிரதிபலிப்பு

கழிப்பறையின்மை வறுமையின் அறிகுறி மட்டுமல்ல; அது நிர்வாக அலட்சியத்தின் சின்னம். பொது சுகாதார ஆய்வாளர்கள் (Public Health Inspectors) வீடுகள் மற்றும் பொதுவிடங்களின் சுகாதார நிலையை கண்காணிக்க நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் அவர்கள் பல இடங்களில் தேவையான வசதியின்றி பணியாற்றுகின்றனர். அதேபோல் உள்ளூராட்சி அமைப்புகள் (Local Government authorities) பொது கழிப்பிடங்கள் அமைப்பது, பராமரிப்பது, வீடுகளுக்கான அனுமதிகளை வழங்குவது போன்ற பொறுப்புகளை வகிக்கின்றன. ஆனாலும் பல கிராமங்களில் பொதுக் கழிப்பிடங்கள் குறைவாகவோ அல்லது பராமரிப்பின்றியோ உள்ளன.

நீர் விநியோகத்தையும் கழிவுநீர் மேலாண்மையையும் கவனிக்கும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் சபை (National Water Supply and Drainage Board) கூட இதில் முக்கிய பங்கு வகிக்க வேண்டும். தண்ணீர் கிடைப்பதே பல இடங்களில் கழிப்பறை அமைப்பை முடக்கும் முக்கிய காரணமாகும்.

### சிறிய தீர்வுகள் – பெரிய மாற்றம்

இவற்றைச் சீர்செய்வதற்கு மிகப் பெரிய கட்டடத் திட்டங்களுக்காகக் காத்திருக்க வேண்டியதில்லை. குறைந்த செலவில் இயங்கக்கூடிய தற்காலிக அல்லது அசைவிக்கக்கூடிய கழிப்பறைகளை (mobile toilets) அரசு முதன்மைப்படுத்தலாம். தேவையான நிதியை வழங்கி, தனியார் நிறுவனங்கள் மற்றும் தன்னார்வ அமைப்புகளையும் இணைத்துக்கொண்டு விரைவாகப் பரப்பலாம். இது ஒரு நீண்டகால பெரும் மலசலகூடத் திட்டங்களைக் காட்டிலும் விரைவாக மக்களின் வாழ்வை மாற்றக்கூடிய வழியாகும்.

சட்டம் மட்டுமே பழக்கத்தை மாற்ற முடியாது. பள்ளிகளிலிருந்தே மாணவர்களுக்கு சுகாதார நெறிகளை கற்பிக்க வேண்டும். திறந்த வெளியில் மலமொழுகுவதால் ஏற்படும் நோய்கள், தண்ணீர் மாசுபாடு, மற்றும் பொதுச் சுகாதாரப் பாதிப்புகள் பற்றி சிறுவயதிலிருந்தே விழிப்புணர்வு ஏற்படுத்தினால், அது தலைமுறைகள் தாண்டிய மாற்றத்தை உருவாக்கும். சில சமூகங்களில் 'அது வழக்கம்' என்ற மனநிலை காரணமாக திறந்த வெளி மலமொழுகல் தொடர்கிறது. இதை மாற்ற கல்வி மற்றும் சமூகப் பங்குபற்றுதலே உதவும்.

### நோய்கள் மற்றும் பாதுகாப்பு

கழிப்பிடமின்றி வெளிப்புறத்தில் மலமொழுகுவது நீர் மூலங்களையே மாசுபடுத்துகிறது. கொலரா, வயிற்றுப்போக்கு, நெருப்புக் காய்ச்சல் போன்ற நோய்கள் இதன் விளைவாக பரவுகின்றன. இது மலமொழுகும் நபருக்கு மட்டுமல்ல; அவரின் சமூகத்துக்கே அபாயமாகிறது. மேலும், பெண்கள் மற்றும் குழந்தைகள் இரவில் வெளியில் செல்லும் போது எதிர்கொள்ளும் பாதுகாப்பு சிக்கல்களும் மிகுந்தவையே.

புள்ளிவிவர திணைக்களம் குறிப்பிட்டுள்ள இன்னொரு கவலைக்குரிய தகவல் – இலங்கையில் 1 இலட்சத்திற்கும் மேற்பட்ட வீடுகள் இன்னும் களிமண் சுவர்கள், பனையோலை அல்லது வைக்கோல் கூரைகள் கொண்டவையாக உள்ளன. இவற்றில் பல வீடுகள் சிமெண்ட் தரைக்கு பதிலாக மணல் தரையையே கொண்டிருக்கின்றன. விறகுகளில் சமைக்கும் வழக்கம் பெண்கள் மற்றும் குழந்தைகளின் சுவாச நலனைப் பாதிக்கிறது. இத்தகைய நிலையில் 'கழிப்பிடமின்மை' என்பது அந்த வாழ்வின் ஒரு பகுதி மட்டுமே; முழுக் குறைபாடல்ல.

### முன்னேற்றத்தின் அர்த்தம்

உயர்மாடிக் கட்டடங்கள், அதிவேக நெடுஞ்சாலைகள், திறன் (ஸ்மார்ட்) நகரங்கள்–இவை அனைத்தும் முக்கியமானவையே. ஆனால் ஒரு குடிமகன் தன் வாழ்விடத்தில் மரியாதையுடன், பாதுகாப்புடன், சுகாதாரத்துடன் தன்னைத் தானே விடுவிக்க முடியாதபோது, 'வளர்ச்சி' என்ற சொல்லே அர்த்தமற்றது.

இலங்கை உண்மையான முன்னேற்றத்தை விரும்பினால், முதலில் ஒவ்வொரு குடும்பமும் கழிப்பறை வசதி பெற்றிருக்க வேண்டும். வானளாவிய கனவுகளுக்கு முன், அடித்தளப் பொறுப்புகளை நிறைவேற்றுவதே நமது கடமை.

அதுவே நாகரிகத்தின் அடையாளம்; அதுவே உண்மையான வளர்ச்சி.

## அபிவிருத்தியை இலக்காகக் கொண்டே 2026 வரவு செலவுத் திட்டம் தயாரிப்பு

### அமைச்சரவைப் பேச்சாளர் தகவல்

அபிவிருத்தியை இலக்காகக் கொண்டே 2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டம் சமர்ப்பிக்கப்படும். முழு நாட்டையும் உள்ளடக்கிய மக்களுக்கு நிவாரணம் வழங்கக் கூடிய வரவு - செலவு திட்டமாகவே அது காணப்படும். இம்முறை வரவு - செலவு திட்டத்தில் வரி அதிகரிக்கப்பட மாட்டாது என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நவம்பர் 7 நிதி அமைச்சர் என்ற ரீதியில் அரசுத் தலைவர் அநுரகுமாரவினால் 2026ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். இம்முறை வரிகள் அதிகரிக்கப்பட மாட்டா என அரசுத் தலைவர் ஏற்கனவே தெரிவித்திருக்கின்றார்.

இயன்றளவு சகல துறைகளுக்கும் நிவாரணம் வழங்க எதிர்பார்க்கப்படுகிறது. எவ்வாறு நிவாரணத்தை வழங்குவது, அபிவிருத்தி திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது குறித்து அரசுத் தலைவர் அநுரகுமார தனது வரவு செலவுத் திட்ட உரையின் போது தெளிவுபடுத்துவார். முழு நாடு தொடர்பிலும், உற்பத்தி தொடர்பிலும் இதன்போது அவதானம் செலுத்தப்படும்.

நாட்டின் பொருளாதாரம் தற்போது உறுதியாகியுள்ளது. அனைத்து துறைகளும் வளர்ச்சிப் போக்கைக் காண்பிக்கின்றன. அவற்றை மேலும் ஊக்குவிக்க வேண்டும். உற்பத்தி, ஏற்றுமதி பொருளாதாரத்தின் மூலம் திறைசேரிக்கும் கிடைக்கும் வருமானம் முறையாக மக்களை சென்றடைவதற்கான வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்படும் என்றார்.

## தேசிய இறக்குமதி வரிக் கொள்கையை தயாரிப்பதற்கு அமைச்சரவை அனுமதி

இலங்கை போட்டி வர்த்தகம் மற்றும் முதலீட்டு மையமாகத் தாபிப்பதற்கு வெளிப்படைத்தன்மை மற்றும் ஊகிக்கக்கூடிய இறக்குமதி வரி முறையின் கீழ் நடைமுறைப்படுத்துவதை இலக்காகக் கொண்ட தேசிய இறக்குமதி வரிக் கொள்கையைத் தயாரிப்பதற்காக 2024.06.11 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

25.11.03 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

இந்த கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக தேசிய இறக்குமதி வரிக்கொள்கைக் குழுவொன்று 2025.01.15 அன்று நியமிக்கப்பட்டுள்ளது. பின்னர் மேற்கொள்ளப்பட்டுள்ள அரச கொள்கைத் திருத்தங்களுக்கமைய, ஒருசில வரிக் கொள்கைகளுடன் இணக்கப்பாட்டை உறுதிப்படுத்துவதற்காகவும் நிச்சயமற்றதன்மையை தவிர்ப்பதற்குமான தேசிய இறக்குமதி வரிக் கொள்கையில் ஒருசில ஏற்பாடுகளைத் திருத்தம் செய்ய வேண்டிய தேவை தேசிய இறக்குமதி வரிக் கொள்கைக்குழுவால் அடையாளங் காணப்பட்டுள்ளது.

அதற்கமைய, அடையாளங் காணப்பட்டுள்ள திருத்தங்களின் அடிப்படையில் தேசிய இறக்குமதி வரிக் கொள்கையைத் திருத்தம் செய்வதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அமைச்சராக அரசுத் தலைவரால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## நேரடித் தொடருந்து பதவிகளில் இனி பெண்களையும் பணியமர்த்த முடிவு

இலங்கை தொடருந்துத் திணைக்களத்தின் தொடருந்து இயந்திர சாரதிகள், தொடருந்து பாதுகாப்பு அதிகாரி, தொடருந்து நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் தொடருந்து மேற்பார்வை முகாமையாளர் போன்ற பதவிகளுக்கு பெண்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

25.11.03 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

165 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றைக் கொண்டுள்ள இலங்கை தொடருந்துச் சேவை இலங்கை தொடருந்துத் திணைக்களத்தின் பல்வேறு பதவிகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகள் கூட்டாக மேற்கொள்கின்ற சேவையாகும். எனினும் இதுவரையில் இயந்திர சாரதிகள், பாதுகாப்பு அதிகாரி, நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் மேற்பார்வை முகாமையாளர் போன்ற பதவிகளுக்குப் பெண்கள் நியமனம் செய்யப்படுவதில்லை.

கண்காணிப்பு முகாமையாளர் பதவிக்கு மட்டுமே 2012 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் பெண் உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர்.

அரசின் புதிய பொருளாதாரக் கொள்கைக்கமைய அரச துறையில் இதுவரை பெண்களை ஆட்சேர்ப்புச் செய்யாத பதவிகளுக்குப் பெண்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் முன்மொழிந்த யோசனையைக் கருத்தில்கொண்டு, தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறைகளில் பெண்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான ஏற்பாடுகள் இன்மையால், அரசமைப்பின் 55 உறுப்புரையின் (1) உப அரசமைப்பு ஏற்பாடுகளுக்கமைய அமைச்சரவைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, தொடருந்து இயந்திர சாரதிகள், தொடருந்து பாதுகாப்பு அதிகாரி, தொடருந்து நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் தொடருந்து மேற்பார்வை முகாமையாளர் போன்ற பதவிகளுக்கு பெண் உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக கொள்கை ரீதியான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## சுன்னாகத்தில் வன்முறைக் குழு திங்கட்கிழமை அட்டகாசம்

சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சூராவத்தை பகுதியில் உள்ள வீடு ஒன்றில் வன்முறை குழுவொன்று திங்கட்கிழமை அட்டகாசத்தில் ஈடுபட்டு முச்சக்கர வண்டியை எரித்துச் சாம்பராக்கியுள்ளது.

வீட்டொன்றிற்குள் அத்துமீறி உள்நுழைந்த குறித்த வன்முறைக்குழு அங்கு நிறுத்தப்பட்டிருந்த முச்சக்கர வண்டிக்குத் தீ வைத்துள்ளது. இதனால் முச்சக்கர வண்டி முழுமையாக தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.

வன்முறைக் கும்பல் வீட்டுக்கும் தீ வைக்க முற்பட்டுள்ளது. வீட்டின் உள்ள இருந்த பொருட்கள் அடித்து நொறுக்கப்பட்டுள்ளன. வீட்டில் இருந்தவர்கள் உடனடியாகத் தீயை அணைக்க நடவடிக்கை எடுத்ததால் பெரும் சேதங்கள் தவிர்க்கப்பட்டன.

இச்சம்பவம் குறித்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன்
2 பரப்பு வயல்க்காணி
B – 2 பரப்பு மேட்டுக்காணியும்
2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C – 2 பரப்பு மேட்டுக்காணி
பிரதான வீதியுடன்
0777 43 55 57

## வத்திக்கான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமூக ஒற்றுமை, சமூக சேவைகள் மற்றும் நாட்டில் ஏழைகள் மற்றும் பின்தங்கிய மக்களுக்கான சேவை சார்ந்த பணிகளில் குறிப்பிடத்தக்க பங்கை வகிக்கிறது. பல்லின அமைப்பைக் கொண்ட கத்தோலிக்கச் சமூகம், அனைத்து சமூகங்களிடையேயும் பரவலாக மதிக்கப்படும் நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

இன்றைய கலந்துரையாடல்களின் போது, கடந்த ஐந்து தசாப்தங்களாக புனிதபீடமானது இலங்கைக்கு வழங்கிய உதவியைப் பாராட்டவும், நமது பன்முக இருதரப்பு உறவுகளைத் தொடர்ந்து வலுப்படுத்த இலங்கையின் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தவும் வாய்ப்பொன்றாக இந்நிகழ்வை நான் பயன்படுத்திக்கொண்டேன்.

கடந்த ஆண்டு தேர்தலுக்குப் பிறகு, இலங்கையில் ஏற்பட்ட முன்னேற்றங்கள், பொருளாதாரத்தை நிலைப்படுத்துதல், நமது மக்களிடையே உண்மையான நல்லிணக்கத்தை உறுதி செய்தல், இலஞ்சம் மற்றும் ஊழலை எதிர்த்துப் போராடுதல், நல்லாட்சி, பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துதல் ஆகியவற்றில் நமது ஆளும்தரப்பு எடுத்த நடவடிக்கைகள் குறித்து நேரடியாகப் பகிர்ந்து கொள்வதற்காக, பேராயர் கல்லாகருடன் நடத்திய கலந்துரையாடல்கள் வாய்ப்பாக அமைந்தன.

நீண்ட அமைதி, நல்லிணக்கம் மற்றும் செழுமையை நோக்கிய பயணத்தை இலங்கை தொடர்ந்து மேற்கொள்ளும் வேளையில், அனைத்து சமூகங்களுக்கும் உரையாடல், உள்ளடக்கம் மற்றும் மத சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கான பங்குகொள்ளும் தரப்பாகவும், உறுதியான ஆதரவாளராகவும், புனித பீடத்தை நாங்கள் கருதுகிறோம். குறிப்பாக சுற்றுச்சூழல் நிலைபேறான தன்மை மற்றும் வளர்ந்து வரும் நாடுகள் எதிர்கொள்ளும் சவால்கள் போன்ற உலகளாவிய பிரச்சினைகளில் ஒத்துழைப்புக்கான புதிய வழிகளை ஆராய்வதற்கு நாங்கள் ஆவலுடனுள்ளோம்.

ஐக்கிய நாடுகள் சபையிலும், பல்தரப்பு மன்றங்களிலும் பகிரப்பட்ட ஆர்வமுள்ள விடயங்களில் புனிதபீடத்துடன் நெருக்கமாக ஒத்துழைக்க இலங்கை தயாராக இருப்பதாகவும் நாங்கள் தெரிவித்தோம். புனிதப் பீடத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான சிறந்த உறவுகள் தொடர்ந்து செழித்து, அதிக புரிதலை ஊக்குவிப்பதுடன், இலங்கை மக்களின் பொது நலனுக்கு சேவை செய்யும் விதமாக அமையும் என்று நாம் பெரிதும் நம்புகிறோம்.

## சுதந்திர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுட்டிக்காட்டினார். இந்தச் சந்திப்பில் இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு என்பவற்றை ஆழப்படுத்துதல் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இலங்கையின் இயற்கை அருட்கொடைகள் மற்றும் மனித திறைமைகள் தொடர்பில் பாராட்டியுள்ள இந்திய நிதி அமைச்சர், இந்தியாவின் மாறிவரும் பொருளாதாரத்துடன் நெருக்கமாக ஈடுபடுவதன் மூலம் இந்த பலங்களைக் கட்டியெழுப்புவதன் முக்கியத்துவத்தும் தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ளார்.

அவ்வாறே, இந்தியா போன்ற பெரிய சந்தை வாய்ப்புகளை அணுகுவதன் மூலம் இலங்கையின் தொழிற்துறையை வேகமாக முன்னேற்றம் காணச் செய்ய முடியும் என்று குறிப்பிட்டுள்ள அவர், வலுவான உள்நாட்டு தொழிற்துறைகள் மூலம் இலங்கையின் பொருளாதார இறையாண்மையை மேம்படுத்திக் கொள்ள முடியும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

2022இல் ஏற்பட்ட நெருக்கடியின் போது இந்தியா வழங்கிய 4 பில்லியன் டொலர் ஒத்துழைப்புக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நன்றிகளைத் தெரிவித்துள்ளார். ஒரு தனி நாடாக இலங்கைக்கு வழங்கிய மிகப்பெரிய நிதி மானியம் இதுவாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொழிற்துறை கொள்கை மற்றும் டிஜிட்டல் ஆளுகை தொடர்பில் இந்தியாவின் சாதனைகளை பாராட்டிய எதிர்க்கட்சித் தலைவர், ஒப்பீட்டு ரீதியாக நிலைத்தன்மை காணப்பட்ட போதிலும், இலங்கை இன்னும் வெளிநாட்டு கையிருப்புக்களை கட்டியெழுப்புதல், ஏற்றுமதிகளை பன்முகப்படுத்தல் மற்றும் வறுமை ஒழிப்பு உள்ளிட்ட முக்கிய சவால்களை எதிர்கொண்டு வருவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

வெளிப்படையான மற்றும் நம்பிக்கை அடிப்படையிலான ஒத்துழைப்பின் அவசியப்பாடு தொடர்பில் இருவரும் இணக்கம் தெரிவித்துள்ளனர். கூட்டு முயற்சியாண்மைகள் மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றத்தை ஊக்குவிப்பதற்கு இந்தியா-இலங்கை தொழிநுட்பம் சார் கைத்தொழில் வலயத்தை உருவாக்கும் யோசனையை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதன்போது முன்வைத்துள்ளார்.

நவீன வர்த்தக யதார்த்தங்களுக்கு ஏற்றவாறு இந்திய-இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை புதுப்பித்துக் கொள்வதற்கும் இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அழைப்பு விடுத்துள்ளார். இந்தியாவின் மாதிரியைப் பின்பற்றி புத்தாக்கம், அரச - தனியார் கூட்டு முயற்சியாண்மைகள், ஆராய்ச்சி மற்றும் வணிகத் துறைகளுடன் பொருளாதாரக் கொள்கைகளை இணைப்பதன் முக்கியத்துவத்தையும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

பரஸ்பர மரியாதை மற்றும் நீண்டகாலக் கூட்டாண்மையின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டுள்ள இந்தியாவுடனான நெருக்கமான பொருளாதார மற்றும் கலாசார உறவுகளை மேம்படுத்திக்கொள்ள தமது கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அர்ப்பணிப்போடுள்ளதாகவும் எதிர்க்கட்சி தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நீதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிபதி இளஞ்செழியன் அண்மையில் லண்டனில் நடந்த நிகழ்வு ஒன்றில் கவலை வெளியிட்டிருந்தார். இது தொடர்பில் அமைச்சரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. கொழும்பிலுள்ள அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பில் அமைச்சரிடம் எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் தெரிவித்ததாவது:

முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் மற்றும் அவரது சேவைகள் தொடர்பில் சமூகத்தில் மதிப்பும், கௌரவமும் காணப்படுகிறது. இவரைப் போன்று பல அரச அதிகாரிகள் காணப்படுகின்றனர். சில சந்தர்ப்பங்களில் நீதிமன்ற கட்டமைப்பிற்குள் சேவை நீடிப்புக்கள் வழங்கப்படும் போது பல விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட வேண்டும்.

சில சந்தர்ப்பங்களில் நீதிமன்ற கட்டமைப்பிற்குள் அடுத்தடுத்த நிலைகளுக்குப் பதவியுயர்வு பெற வேண்டியவர்களுக்கு சிக்கல்கள் ஏற்படக்கூடும். அவ்வாறான காரணிகளை அடிப்படையாகக் கொண்டு அவருக்கு சேவை நீடிப்பு வழங்கப்படாமல் இருந்திருக்கலாம். மாறாகத் திட்டமிட்டு அவருக்கான சேவை நீடிப்பு வழங்கப்படாமல் இருக்கவில்லை. இது வழமையான நடைமுறையாகும்.

சில துறைகளில் சேவை நீடிப்புக்கள் வழங்கப்பட்டிருக்குமாயின், அங்கு பதவி வெற்றிடங்களுக்கான நியமனங்களுக்கு பொறுத்தமானவர்கள் இல்லாமல் இருந்திருக்கலாம். எனவேதான் அங்கு ஓய்வு பெறவிருந்த அதிகாரிகளுக்கு பதவி நீடிப்பு வழங்கப்பட்டிருக்கும். எனவே முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியனது சட்டத்துறைசார் சேவை மீது என்றும் எமக்கு மதிப்பும் கௌரவமும் காணப்படுகிறது என்றார்.

## யாழ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, தென்மராட்சி வரணியில் ஹெரோயின் போதைப் பொருளுடன் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொடிகாமம் பொலிசாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் 3 கிராம் 800 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளைத் தனது உடமையில் வைத்திருந்த வரணிப் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞரே கைது செய்யப்பட்டுள்ளார்.

## முன்னாள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

எந்த ஒருவருக்கும் தனது பாதுகாப்பு தொடர்பில் பிரச்சினை காணப்படுமாயின், பொலிசாருக்கு அது குறித்து அறிவிக்க முடியும். அதற்கமைய பொலிஸாரால் முன்னெடுக்கப்படும் மதிப்பாய்வுக்கமைய பாதுகாப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாதுகாப்புக் கோரியுள்ளனர் என்று செய்திகள் மூலம் அறியக் கிடைத்தது.

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் பாதுகாப்பிற்காக பிஸ்டர் ரக துப்பாக்கியைக் கோரியுள்ளனர் எனவும் தெரியவருகிறது. அது குறித்து பொலிஸாரால் மதிப்பாய்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மதிப்பாய்வின் நிறைவில் பொலிஸாரால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

தற்போது நாட்டில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குழுக்களுக்கிடையில் மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. அவர்களுக்கிடையில் துப்பாக்கிச்சூட்டு சண்டைகளும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ்வாறான நிலைமைக்கு மத்தியில் முன்னர் ஆட்சியிலிருந்தவர்கள், பாதுகாப்பினைக் கோருகின்ற நிலையில், பொலிஸார் அது குறித்து அவதானம் செலுத்துவர். ஆனால் எமக்கு துப்பாக்கிகள் தேவையில்லை. ஆளுங்கட்சியில் எவரும் தமக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாக பொலிஸில் முறைப்பாடளிக்கவில்லை என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# ஊசலாடும் பாடசாலை நேரமாற்றம்!



இலங்கையில் பாடசாலை நேர மாற்றம் அல்லது நேர நீடிப்பு என்பது இன்று ஊசலாடும் நிலைக்கு வந்துள்ளது.

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் தொழிற்சங்கங்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ள நிலையிலும் அடுத்த ஆண்டு (2026) ஜனவரி மாதம் முதல் பாடசாலை நேரத்தை பிற்பகல் 2 மணி வரை நீடிக்கும் முடிவில் எந்த மாற்றமும் இல்லை என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதே வேளை ஆளும்தரப்பு பாடசாலை நேர நீடிப்பைத் திரும்பப் பெறவேண்டும். இன்றேல் தொழிற்சங்க நடவடிக்கைகளில் இறங்கவேண்டி நேரிடும் என அதிபர் ஆசிரியர்கள் தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை விடுத்து ஏழாம் திகதி வெள்ளிக்கிழமை வரை கால அவகாசம் கொடுத்துள்ளது.

பொதுவாக நோக்கினால் பாடசாலை நேரத்தை அரை மணிநேரம் அதிகரித்தால், முழு கட்டமைப்பிலும் மாற்றங்களை ஏற்படுத்தவேண்டும். அவற்றை முறையாக நடைமுறைப்படுத்தவும் வேண்டும் என்பதே சகலரினதும் எதிர்பார்ப்புமாகும்.

அண்மையில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களுக்கு வந்திருந்த பிரதமரும் கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி சென்ற இடமெல்லாம் கல்வி சீர்திருத்தம் மற்றும் பாடசாலை நேர மாற்றம் தொடர்பிலேயே உரையாற்றியிருந்தார். குறிப்பாகப் பாடசாலை நேர மாற்றம் தொடர்பில் எவ்வித பிரச்சினைகளும் தோன்றவில்லை என் பிரதமர் கூறியிருந்தார். மறுகணம் தொழிற்சங்கங்களோ பிரச்சினைகள் குறித்துத் தாம் எழுத்து மூலம் ஆளும்தரப்புக்குத் தெரியப்படுத்தியுள்ளோம் என்று தெரிவித்துள்ளன.

இந்த நிலை ஆரோக்கியமான ஒன்றல்ல. அரசும் தொழிற்சங்கங்களும் விடாக்கொண்டன் கொடாக்கண்டன் நிலையில் இருந்து விடுபட்டு இதற்கு நியாயமான தீர்வு காண வேண்டும். பாடசாலை என்பது தனி ஒரு கல்விச் சமூகத்துடன் சம்பந்துப்பட்டதல்ல. பல சமூகங்களுடன் தொடர்பு பட்டவை. கல்வி அமைச்சு, போக்குவரத்து துறை மட்டுமல்ல குடும்பம் என்ற ரீதியில் சகல துறைகளுடனும் சம்பந்தப்பட்டது பாடசாலை ஆகும்.

எனவே, ஆளும்தரப்பு கல்விச் சமூகம் மற்றும் பாடசாலை சார்ந்த சமூகங்கள் எதிர்நோக்கும் சவால்களைக் கருத்திற்கொண்டு முறையான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

## அரசின் தீர்க்கமான முடிவு!

ஆசிரியர்கள்மற்றும்அதிபர்களின்தொழிற்சங்கங்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ள நிலையிலும் அடுத்த ஆண்டு (2026) ஜனவரி மாதம் முதல் பாடசாலை நேரத்தை பிற்பகல் 2 மணி வரை நீடிக்கும் முடிவில் எந்த மாற்றமும் இல்லை என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

'நாங்கள் நிபுணர்கள் அல்லர்; தேசிய கல்வி நிறுவனமே சீர்திருத்தங்களை வடிவமைக்கும். அதன் கொள்கைகளை மாற்ற முடியாது. ஏற்கனவே செலவு ஒதுக்கப்பட்டுள்ளது' என கல்வி அமைச்சின் செயலாளர் நாலக்க கலுவேவ தெரிவித்துள்ளார்.

முதலில் ஒரு பாடத்துக்கான நேரம் 40 நிமிடங்களிலிருந்து ஒரு மணிநேரமாக நீடிக்கப்படவிருந்தது, ஆனால், பின்னர் அது 50 நிமிடங்களாகக் குறைக்கப்பட்டது, இதன் காரணமாகவே பாடசாலை நேரத்தை பிற்பகல் 2 மணி வரை நீடிக்க வேண்டிய கட்டாயமும் ஏற்பட்டுள்ளது. இந்தச் சீர்திருத்தங்கள் தேசிய கல்வி நிறுவனத்தின் பரிந்துரைகளின்படி செயல்படுத்தப்பட வேண்டும் எனவும் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது பிற்பகல் 1.30 மணி வரை இருக்கும் பாடசாலை நேரம், இந்தச் சீர்திருத்தத்தின் கீழ் காலை 7.30 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை (30 நிமிடங்கள் அதிகரிப்பு) நீட்டிக்கப்படவுள்ளது. ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் தொழிற்சங்கங்கள் இந்த புதிய கால அட்டவணையை எதிர்த்து வருகின்றன. நவம்பர் 7ஆம் திகதிக்குள் ஆளும்தரப்பு முன்மொழியப்பட்ட கால அட்டவணையைத் திருத்தாவிட்டால், புதிய பாடசாலைப் பருவம் தொடங்கும் போது ஒரு நாள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக அவர்கள் எச்சரித்துள்ளனர்.

## சாதக பாதகங்கள்

பாடசாலை நேரத்தை அரை மணிநேரத்தால் நீடிப்பதால் பல துறைகளைச் சேர்ந்தவர்களும் கடுமையான சிரமங்களுக்கு முகங்கொடுக்க நேரிடும். பாடசாலைகளுக்குச் சென்று திரும்புவதற்கு பொதுப் போக்குவரத்து சேவைகளைப் பயன்படுத்துவோர், பாடசாலை வாகனங்களைப் பயன்படுத்துவோர் மேலதிகமாக அரை மணிநேரம் காத்திருக்கவேண்டும்.

வேலைக்குச் செல்லும் பெற்றோர்கள் என்றால், தங்களுடைய மதிய உணவு நேரத்தில் பிள்ளைகளை வீட்டுக்கு அழைத்துச் சென்று விடுதல் பாதிக்கப்படும். அதுமட்டுமன்றி, தொடருந்துகளில் பயணிக்கும் ஆசிரியர்கள், மாணவர்களும் சிரமங்களை எதிர்கொள்ளவேண்டிய நிலைமை ஏற்படும். ஆகையால்தான், போக்குவரத்தில் பாடசாலை நேர மாற்றத்திற்கு ஏற்பத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ளுமாறு நெடுஞ்சாலைகள் மற்றும் நகர்ப்புற அபிவிருத்தி அமைச்சுக்கு கல்வி உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

பாடசாலை நேரத்தை 30 நிமிடங்கள் நீடிக்க நடவடிக்கை எடுத்தால், அதற்கான நியாயமான சம்பள உயர்வும் வழங்கப்பட வேண்டும் என்று ஆசிரியர்கள் வலியுறுத்துகின்றனர். தற்போதைய பாடசாலை நேரம் நீடிக்கப்படும் என்று கூறுவதன் மூலம், அவர்களுக்கு அதிக கடமைகள் மற்றும் பொறுப்புகள் வழங்கப்படும் என்று சுட்டிக்காட்டும் ஆசிரியர்கள், அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பொறுப்புகளை நிறைவேற்றுவதில் நியாயமாக நடக்கவேண்டும் என்றும் சுட்டிக்காட்டுகின்றனர்.

'கற்பித்தல் நேரத்தை நீட்டிப்பதன் மூலம் முன்மொழியப்பட்ட திட்டத்தின் மூலம் அவர்கள் சில உற்பத்தித்திறனை எதிர்பார்க்கிறார்கள். பாடசாலை நேரம் ஒரு நாளைக்கு முப்பது நிமிடங்கள் நீட்டிக்கப்படும் என்று கூறுவதன் மூலம், ஆசிரியர்கள் மாதத்திற்கு இருபது சேவை நாட்களை உள்ளடக்கும்போது மாதத்திற்குக் கூடுதலாக பத்து மணிநேரம் வேலை செய்யவேண்டியிருக்கும். இந்த வழியில், இது ஆசிரியர்களின் சம்பளத்தில் நேரடி தாக்கத்தைஏற்படுத்தும்.' என்றுசுட்டிக்காட்டுகின்றனர்.

அதுமட்டுமன்றி, பாடசாலை நிறைவடைந்து, மேலதிக வகுப்புகள், தனியார் வகுப்புகளுக்குச் செல்லும் மாணவர்களும் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்படும். ஆகையால், பாடசாலை நிறைவடைந்து, இன்னும் இரண்டொரு மணிநேரத்துக்குப் பின்னரான பயண ஏற்பாடுகளை மேற்கொள்ளும் வகையில் போக்குவரத்தைமறுசீரமைக்கவேண்டும். இதேவேளை, பெரும்பாலான அரச பேருந்துகள், சீருடைகளில் நிற்கும் மாணவர்களை ஏற்றிச் செல்வதில்லை. அத்துடன், பல தூரபிரதேசங்களில் அரச பேருந்து போக்குவரத்து ஒழுங்குமுறையில் இல்லை என்ற குற்றச்சாட்டுகளும் உள்ளன.

குற்றச்சாட்டுகள் என்பதைவிட, அதுதான் உண்மையாகும். ஆகையால், அந்தப்பிரச்சினையையும் நிவர்த்தி செய்யவேண்டும். வருவது உயர்தர பரீட்சை. அடுத்து ஜனவரியில் பாடசாலைகள் ஆரம்பமாகும். எனவே ஆளும்தரப்பு விரைந்து தீர்வு காண வேண்டும் என்பதே பலரதும் எதிர்பார்ப்பு ஆகும்.





சகாதேவராஜா







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.11.2025இல் வெளியிடப்பெற்றது